# கிழக்கு - வவுனியா தேர்தல்கள் ஒத்திவைப்பு!

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
26-11-1993
யாழ்ப்பாணம்

விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 12 இதழ் 283
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 27-11-1993

(கொழும்பு)
கிழக்கு மாகாண உள்ளூர் அதிகார சபைகளுக்கும் வவுனியா நகரசபைகளுக்குமான தேர்தல்கள் மறு திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

இந்த அறிவித்தலை நேற்று ஜனாதிபதி செயலகம் உத்தியோகபூர்வமாக வெளியிட்டது பூநகரித் தாக்குதலின் எதிரொலியாகவே இத்தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

மேற்படி இடங்களுக்கான தேர்தல்களுக்குத் தேர்தல்களுக்(

(2ம் பக்கம் பார்க்க)

## மார்ச்சில் தேர்தல் என்கிறார் அமைச்சர் கூரே

(கொழும்பு)
கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல்கள் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறும்.

வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சரும் ஐக்கிய தேசியக்கட்சி பொதுச்செயலாளருமான சிறிசேன கூரே நேற்று பி. பி. ஸிக்கு இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இதுகுறித்து மேலும் தெரிவித்ததாவது: கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஏற்றுக்கொள்ளப் படும். (இ—க)

# இராணுவ அடக்குமுறை திணிக்கப்படுகிறது
# தனி அரசைத் தவிர எமக்கு வேறு பாதை எதுவும் இல்லை

## - தலைவர் பிரபா மாவீரர் தினச் செய்தி -

(யாழ்ப்பாணம்)
"தமிழீழத் தனியரசே தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு இறுதியான, உறுதியான தீர்வு என்பதில் எமக்கு அசையாத நம்பிக்கையும் தெளிவும் உண்டு எமது நிலைப்பாட்டை எமது எதிரி மட்டுமன்றி, முழு உலகமும் நன்கறியும். இன் நிலையில் சிங்களப் பேரினவாதத்தின் கடுமையான போக்கு தனியரசு என்ற ஒரே பாதையைத்தான் தமிழீழ மக்களுக்குத் திறந்து வைத்திருக்கிறது. அந்தப் பாதையில் செல்வதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவும் இல்லை" இவ்வாறு தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் வெளியிட்டுள்ள 'மாவீரர்' தினச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் அவர்மேலும் தெரிவித்துள்ளதாவது:

இன்று மாவீரர் நாள். சுதந்திர இயக்கத்தின் சரித்திரச் சிற்பிகளான விடுதலை வீரர்களை நாம் நினைவுகூரும் நன் நாள். ஆண்டாண்டு காலமாக அடிமை விலங்கில் முடங்கிக் கிடந்த எமது தாயகத்தை வீறுகொண்டு எரியும் விடுதலைக் களமாக மாற்றி விட்ட வீர மறவர்களை நாம் நினைவுகொள்ளும் புனிதநாள். எமது நாடு எமக்கே சொந்தம் என்ற உரிமைக் குரலை உலகெங்கும் முழங்கச்செய்த உன்னத தியாகிகளை நாம் எமது நெஞ்சுப் பசுமையில் நிறுத்திக் கொள்ளும் தேசிய நாள்.



மாவீரர் நாள் எமது தேசத்தின் துக்கதினம் அல்ல. நாம் கண்ணீர் சிந்திக் கவலை கொள்ளும் சோகதினம் அல்ல. இன்றைய நாள் ஒரு தேசிய எழுச்சி தினம். எமது தேசம் சுதந்திரம் வேண்டி உறுதி பூணும் புரட்சி தினம். மாவீரர்கள் ஒரு சத்திய இலட்சியத்திற்காக மரணிக்கிறார்கள். அவர்களது சாவு, சாதாரண மரண நிகழ்வு அல்ல. எமது தேச விடுதலையின் ஆன்மீக அறைகூவலாகவே மாவீரர்களது மரணம் நிகழ்கிறது.

எமக்கு ஒரு நாடு வேண்டும்; எமது மக்களுக்கு விடுதலை வேண்டும்; எமது இனம் சுதந்திரமாக வாழவேண்டும் என்ற ஆக்ரோசமான இலட்சிய வேட்கையுடனேயே மாவீரர்கள் களத்தில் வீழுகிறார்கள். எனவே, எமது மாவீரர்கள் ஒவ்வொருவரது சாவும், எமது நாட்டின் விடுதலையை முரசறையும் வீரசுதந்திரப் பிரகடனமாகவே சம்பவிக்கிறது.

இந்த நிலத்தின் நெஞ்சில்

(6ம் பக்கம் பார்க்க)

## தலைவர் பிரபாவை வாழ்த்தி விசேட வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)
தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் 39வது பிறந்தநாளை யொட்டி நேற்று இணுவில் சிவகாமி அம்மன் ஆலயத்தில் விசேட வழிபாடு நடைபெற்றது.

இவ்வழிபாட்டில் பெருமளவு பொதுமக்கள் கலந்துகொண்டதுடன், தா. மகாதேவக்குருக்கள், ந. வீரமணிஐயர், பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் ஆசியுரை வழங்கினர்கள். வி-கி

## புலிகளின் குரலில் தலைவரின் மாவீரர் தினச் செய்தி

(யாழ்ப்பாணம்)
தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் மாவீரர் தினத்தை யொட்டி நேற்று நள்ளிரவு புலிகளின் குரல் வானொலியில் உரையாற்றினார்.

மாவீரர் சுடரேற்றப் பாடலை அடுத்து திரு. வே. பிரபாகரன் உரையாற்றினார். புலிகளின் குரல் வானொலி மாவீரர் தினத்தை யொட்டி நேற்று இரவு 9 மணியிலிருந்து நள்ளிரவு 12-30 மணிவரை நீடிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. —கி

## ஹெலி தாக்குதலில் ஐவர் படுகாயம்

(சாவகச்சேரி)
பளை, கொடிகாமம், சாவகச்சேரி, கிளாலி பகுதிகளில் ஹெலிகொப்டரிலிருந்து நேற்றுக்காலை நடத்தப்பட்ட ஷெல், கிரனைட் தாக்குதல்களினால் ஐந்துபேர் காயமடைந்தனர்.

கொடிகாமம் சந்தைப்பகுதியில் குழுமியிருந்த மக்கள்மீது ஹெலி கொப்டரிலிருந்து சரமாரியான கலிபர் தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலின்போது வி. நடராசா (69 வயது, மீசாலை) என்பவரும் சாவகச்சேரியில் இடம் பெற்ற தாக்குதலில் இ. ஜெயா (27 வயது, கைதடி நுணாவில்) பளையில் இடம்பெற்ற தாக்குதலில் க. கிருபைநாயகம் (28 வயது பளை) தர்மினி (20 வயது) ஆகியோர் காயமடைந்தனர்.

பளையில் இடம்பெற்ற தாக்குதலில் இரண்டு கடைகள், இரண்டு லொறிகள் சேதமடைந்தன. 158, 156 155, 157ம்

# நள்ளிரவு நினைவுச்சுடர் ஏற்றி மாவீரருக்கு மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)
மாவீரர் தினம் நேற்று நள்ளிரவு 12 -01 மணியிலிருந்து தமிழீழமெங்கும் அனுஷ்டிக்கப்படுகின்றது.

நேற்று நள்ளிரவு 12-01 மணியளவில் தமிழீழம் எங்கும் மக்கள் எழுந்து நின்று 2 நிமிடம் மாவீரர்களுக்கு அமைதி வணக்கம் செலுத்தினார்கள். அப்போது தேவாலயங்கள், கோவில்கள், பாட

(2-ம் பக்கம் பார்க்க)

## மாவீரர்களின் பெற்றோர் 16 இடங்களில் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)
மாவீரர்களின் பெற்றோர்கள் 16 இடங்களில் நேற்றுக் கௌரவிக்கப்பட்டனர்.

நேற்றுக் காலை 9-30 மணியளவில் மாவீரர்களின் பெற்றோர்கள் வீடுகளிலிருந்து அழைத்து

(2-ம் பக்கம் பார்க்க)

# சுப்பசொனிக் தாக்குதலில் அதிபர், ஆசிரியர், மாணவர் காயம்

(யாழ்ப்பாணம்)
சுப்பசொனிக் விமானங்கள் நேற்றுக்காலை திருநெல்வேலி கொக்குவில் பகுதிகளில்மேற் கொண்ட குண்டுவீச்சினால் பிரதிஅதிபர் ஆசிரியை, பாடசாலை மாணவிகள், பொதுமக்கள் உட்பட எட்டுப் பேர் வரை காயமடைந்தனர்.

திருநெல்வேலி பாற்பண்ணை பாடசாலை சேதம

வீதியில் முத்துத்தம்பி மகா வித்தியாலயத்திற்கு முன்புற

(2ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**O/L கணிதம் 93**

உயர்ந்த பெறுபேறடைய 40 மணித்தியாலங்களில் மீட்டல் வினாவிடை மூலம் B. Sc. (Cey) ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, இலவன் கோவிலடி, திருநெல்வேலி. (இ-623)

**"மீரா" வரப்போகு துள்ளி வரப்போறு!**

"மீரா" வரப்போகு. தாமரைச் செல்வி எழுதும் "தாகம்" புதிய நாவலுடன் "மீரா" பிரசுரங்கள் வெளியாகின்றது. பூபாலசிங்கம் ஸ்ரீகாந், வசந்தம் புத்தகசாலைகள் யாழ்ப்பாணம் (இ-616)

**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள டபிள் (ஜேர்மன் நீக்ஸ்) ஆர்மோனியம் விற்பனைக்குண்டு. தொடர்பு:-ந.இலங்கேஸ்வரன் சாவல்கட்டு சந்தையடி ஆனைக்கோட்டை. (இ-624)



மாவீரர் புகழ்பாடும் நன்னாள்!

சுவையான சிற்றுண்டி வகைகளுக்கு

# வேல் முருகன் கபே

(சைவ ஹோட்டல்)

பலாலி வீதி, திருநெல்வேலிச்சந்தி,

திருநெல்வேலி.


**மாவீரர்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சமூக நிலையத்தினர் உடுப்பிட்டி வீதியைச் சிரமதான மூலம் துப்புரவாக்கி புனரமைப்புச் செய்துள்ளனர். அத்துடன் மரம் நாட்டும் நடவடிக்கைகளையும் இச்சன சமூக நிலையத்தினர் மேற்கொண்டுள்ளனர். (52)

**இழக்கு-வவுனியா**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களை தாக்கல் செய்வதற்கு போதிய அவகாசம் இல்லையென்று பல தமிழ்க்கட்சிகள் ஆட்சேபம் தெரிவித்ததினால் இத்தேர்தல்களை ஒத்திவைப்பதாக ஜனாதிபதி திரு. டி. பி. விஜேதுங்கா அறிவித்துள்ளார். (வி-ரி)

**நள்ளிரவு**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாலைகளில் உள்ள மணிகள் ஒலித்தன. இதனைத் தொடர்ந்து மாவீரர் நினைவுச்சுடர் ஏற்றப்பட்டது.

மாவீரரின் பெற்றோர்கள் உரித்துடையோர்கள் சுடரேற்றினர். மாவீரர் சுடரேற்றல் மாவீரர் துயிலும் இல்லங்களில் நடைபெற்றன. வீடுகள், பாடசாலைகள், ப. நோ. கூ. சங்கங்கள் உட்பட பல இடங்களில் மாவீரர் சுடர் நேற்று நள்ளிரவு ஏற்றப்பட்டது. (வி-ரி)

**கப்பல் சோனிக்**

1-ம் பக்கத் தொடர்ச்சி

மாக உள்ள வளவொன்றினுள் விழுந்த குண்டினால் இரு பெரும் குழிகள் தோண்டப்பட்டுள்ளன. இதனால் சிவபாதம், செபஸ்தியாம்பிள்ளை ஆகியோரது வீடுகள் உட்பட நான்கிற்கும் மேற்பட்ட வீடுகள் பலத்த சேதம் அடைந்தன. குண்டுகள் இரண்டும் வெளிவான வளவினுள் விழுந்ததினால் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது இக்குண்டின் சிதறலினால் சிறுவனொருவன் காயமடைந்தான்.

இரண்டாவது குண்டு கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மகளிர் பாடசாலை மீது மேற்கொள்ளப்பட்டதனால் பாடசாலை பிரதி அதிபர், ஆசிரியை, மாணவிகள் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் பிரதி அதிபர் திரு. பற்குணம் (வயது 42), ஆசிரியை திருமதி ராஜரத்தினம், பாடசாலை மாணவிகள்: சுமித்ரா (வயது 15), அஜந்தினி (வயது 15), திருநெல்வேலியில் க. செல்வநாயகம் (வயது 21), இ. சர்மிளா (14 வயது) ஆகியோர் காயமடைந்தனர். பாடசாலை மீது மேற்கொண்ட குண்டு வீச்சினால் பாடசாலை மண்டபம், தற்காலிக அதிபர் அலுவலகம், விஞ்ஞான ஆய்வு கூடம் என்பன சேதமடைந்துள்ளன. (157-158-ரி)

**மாவீரர்களின்**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டு காலை 10-30 மணியளவில் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து இசை நிகழ்ச்சிகளும் ஒளிப்படக்காட்சியும் காண்பிக்கப்பட்டன.

மாவீரர்களின் பெற்றோர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டபின்பு போராளிகளுடன் இவர்கள் கலந்துரையாடினார்கள் இதன் பின்பு இவர்கள் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

இதே போன்று மன்னார் முல்லைத்தீவு, வன்னிப் பிரதேசங்களிலும் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். (-வி-ரி)


தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கணனி கல்வி நிலையங்களுடன் இணைந்து நடாத்தும்

கணனி, இலத்திரனியல்

# கண்காட்சி

2993 நவம்பர் 10ம், 11ம், 12ம் திகதிகளில் யாழ் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கென விளம்பரப் படுத்தப்பட்டு 10ம் திகதியுடன் இடைநிறுத்தப்பட்ட மேற்படி கண்காட்சி, மீண்டும் 1993 டிசெம்பர் 1ம், 2ம் 3ம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடாத்தப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

பிரவேசம்: ரூபா 10/- சிறுவர்களுக்கு ரூபா 5/-

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

(ஏ-3618)


# அறிவித்தல்

யாழ். செயலகத் தேவைக்கான தளபாடங்கள் செய்து வழங்குதல், உபயோகிக்கத் தகாத பொருட்கள் ஏலவிற்பனை என்பன தொடர்பான அறிவிப்புகள் தவிர்க்க முடியாத காரணங்களால் பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

1. யாழ் செயலகத் தேவைக்கான தளபாடங்கள் செய்து வழங்குதல்

கேள்விப்பத்திரம் பெற்றுக் கொள்ளும் தினம்:

29-11-93 மு. ப. 11 மணி

கேள்விப் பத்திரங்களை செயலக நிர்வாக அலுவலர் காரியாலய கேள்விப் பெட்டியில் சேர்க்கும்

முடிவு திகதி: 30-11-93 பி. பகல் 2-30மணி

2. உபயோகிக்கத் தகாத பொருட்களின் ஏலவிற்பனைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

கா. மாணிக்கவாசகர்

அரசாங்க அதிபரும் மாவட்ட ஆணையாளரும்

(ஏ-3626)


★ மாவீரர்களை போற்றுவது மட்டுமல்ல அவர் வழி சென்று சுதந்திரம் பெறுவோம்!

சைவ உணவு வகைகளுக்கு

நல்லோர் மனத்தில் நற்பெயர்

# கண்ணன் லொட்ஜ்,

பரமேஸ்வராச் சந்தி,

திருநெல்வேலி.



தமிழினத்தை தலைநிமிர வைத்த மாவீரர்கள் புகழ் பாடுவோம்!!

ஃ உங்களுக்குத் தேவையான மூக்குக் கண்ணாடிகளை நியாயவிலையில் குறிப்பிட்ட நேரத்தில் வழங்கும் ஒரே ஸ்தாபனம். மூக்குக் கண்ணாடிகளின் முன்னோடிகள்.

விழி உங்களிடம்
அதன் ஒளி எங்களிடம்

**எரிக் கண்ணாஸ்** 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



மாவீரர்களே நீங்கள் மரித்தவர்களல்ல!!
தமிழ் ஈழத்தின் விழுவுக்காக விதைத்தவர்கள்!!
சுதந்திர புருஷர்களே இன்று துதி பாடுவோம்!!!

றேடியோ, ரி. வி. டெக், எலெக்ரோனிக் பொருட்களின் உதிரிப்பாக விற்பனையாளரும் 33 ஆண்டுகளாக பழுது பார்ப்பதில் நிபுணத்துவம்பெற்ற வியாபாரிகள்

# றேடியோ மனுவல்

121, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.



எங்களை சுதந்திர புருஷர்களாக வாழ வழிதேடும் மாவீரர்கள் என்றும் போற்றி வழிபடக் கூடியவர்கள்!



ஃ தரமான இமிரேஷன் கோல்ட் கவறிங் நகைகள்

ஃ மணப் பெண ஜோடனை நகைகள்

ஃ லேஸ் நூல் வகைகள்

ஃ சிறுவர் விளையாட்டுப் பொருட்கள்

ஃ உள்நாட்டு வெளிநாட்டு அழகுசாதனப் பொருட்கள்

ஃ சில்வர் பாத்திரங்கள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

# ஜெயா அழகுசாதன மாளிகை,

177A, மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம்.
160. நவீன சந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம்,
கோ அழகுசாதன விற்பனை நிலையம்.
25. 48. பெரியகடை யாழ்ப்பாணம்.



சங்ககால இலக்கியங்களை மீண்டும் ஞாபகப்படுத்தும்

"எம் தம்பிகள்" மாவீரர்கள் புகழ் பாடுவோம்!!

சகலவிதமான ஆங்கில மருந்து வகைகளின் நம்பிக்கைபெற்ற வியாபாரிகள்

# எஸ்ரி மெடிக்கல்ஸ்

490, மருத்துவமனை வீதி
[O. P. D. முன்பாக]
யாழ்ப்பாணம்.

மணிவாசகம்
தேம்பி அழும் குழந்தையின் மௌனமான சாபம் வலிமைமிக்க மனிதனின் ஆத்திரத்தை விட வலிமை மிக்கது.
- எலிஸபெத் பிரவுனிங்

## நமது நோக்கு

### மாவீரர் தியாகம்!

தமிழ்த் தேசியத்திற்கு வித்திட்டவர்கள், அதனை வளர்த்தெடுப்பவர்கள், அதனை நிலைநாட்டத் தமது உயிர்களையே ஆகுதியாக்கியவர்கள் மாவீரர்கள்!

அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட இனங்கள், போராடித் தமது சுதந்திரத்தை நிலைநாட்டிய பல அரிய நிகழ்ச்சிகள் வரலாற்றிலே பதிவாகியுள்ளன.

ஆனால், உலக வரலாற்றில் எங்கும் எப்போதும் நிகழாத அற்புதமான தியாகங்களும், அதிசயமான அர்ப்பணிப்புகளும் எமது தாயக மண்ணில் நிகழ்ந்துள்ளன.

பல கோடி ரூபாய்களைக் கொட்டி வாங்கப்பட்ட விரைந்து தாக்கும் விசைப்படகுகள், நோட்டமிடும் உலங்கு வானூர்திகள், பொதுமக்களைப் பழி வாங்கும் புக்காராக்கள், எறிகணைகள் போன்ற பல பயங்கரப் பின்னணிகளை உடைய இராணுவத்தை எதிர்கொள்வது எளிதான காரியமன்று.

அங்குலம் அங்குலமாக முன்னேறுகிறோம், அடிமேல் அடி எடுத்து வைக்கிறோம், மீண்டும் கைப்பற்றுகிறோம், கைப்பற்றிக் கொண்டிருக்கிறோம் என்ற "வீர அறிக்கைகளை" வெளியிடச் செய்யும் விநோதம் இங்குதான் நடைபெறுகிறது.

சாவுக்கஞ்சாத வீரத்திற்கு இலக்கணம் வகுத்தவர் வள்ளுவர்.

"கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்றல் அதுவே படை!"

உயிரைக் கொண்டு போகும் யமனே வெகுண்டு மேல்வந்தாலும், நெஞ்சொடித்து எதிர்நின்று தாக்கும் ஆற்றலுடையதே படை என்பது விளக்கம்.

இங்கு, வள்ளுவர் வகுத்த இலக்கணத்திற்கு இலக்கியமாகிவிட்டவர் மாவீரர்கள்!

நமது பகுதியிலே வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, நோய்கள் பெருக்கம், போஷாக்கின்மை, உயர் தொழில் நுட்பம் தெரியாமை, வாணிபம் குன்றியமை போன்ற இன்ன பிறவற்றிற்கு அடிப்படைக் காரணம் என்ன?

நமது மண்ணை, நமது மனித வளத்தை நாம் விரும்பும் வகையில் அபிவிருத்தி செய்யும் உரிமை, மறுக்கப்பட்டிருக்கின்றது ஆக்கிரமிப்பாளர்களால்.

எனவே, மனித வளர்ச்சிக்கும், பொருளாதாரச் சீரமைப்புக்கும் ஆதாரமான சுதந்திரம் எந்த விலை கொடுத்தேனும் பெறப்பட வேண்டும்.

மத வேறுபாடின்றி, சாதி வேறுபாடின்றி, பால் வேறுபாடின்றி ஒரே இனமாகக் கூடி எதிர்க்கும் போராட்டம் தொடர்கிறது. அதில் உயிர்த் தியாகம் செய்த மாவீரர்கள் மதிக்கப்பட வேண்டும்!

# தமிழீழ மக்களின் மேன்மையை உயர்த்திய மாவீரர்களைப் போற்றித் துதிப்போம்

(யாழ்ப்பாணம்)

நவம்பர் 27ம் திகதி, இது தமிழ் மக்களின் வாழ்விலே மிகவும் மகிமை பொருந்திய ஒரு நாளாகும். தமிழீழத் தேசிய இனத்தின் உயர்வுக்கு வழிகள் சமைக்கும் நாளாகவும் இது இருக்கின்றது. தமிழீழ மக்களின் அனைத்து உழைப்புக்களையும், தமிழினத்தின் உன்னத பண்புகளை வெளிப்படுத்தி நிற்கும் வகையிலே ஆற்றிட ஊக்குவிக்கும் இயங்கு சக்தியாகவும் இந்த நவம்பர் 27ம் நாள் இயங்குகின்றது.

இவ்வாறு மாவீரர் பணிமனை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கை மேலும் கூறுகையில்:

தமிழீழ விடிவிற்காக, தம் இன்னுயிர்களை ஈகம் செய்த மாவீரர்களை, அவர்களின் மகத்தான சாதனைகளின் வரலாறுகளைத் தமிழீழ மக்களுடன், மனித நேயம் படைத்த அனைத்து மக்களும் மன நிறைவோடு நினைவுகொள்ளும் ஏற்றம் மிகுந்த நாளாக நவம்பர் 27 திகழ்கின்றது. மாவீரர் நாள் என இந்த நாளுக்கு மேன்மை மகுடம் சூட்டப்பட்டுள்ளது. இந்த நாள் அனைவராலும் புனித நாளாகப் போற்றப்படுகின்றது.

துன்பப் புயலிலே சிக்குண்டு துடித்து, நித்தம் துயரப்பட்டுக் கிடக்கும் தமிழீழ மக்களின் அவல வாழ்வு அகன்று, இன்பம் மிகுந்த சந்தோஷ சுதந்திர வாழ்வை மனதிற்கு இதம் தரும் வகையிலே தமிழ் மக்கள் அடைவார்கள் என்பதை எடுத்துக் காட்டும் விடிவின் வடிவமான ஒளி நாளாகவும் இந்நாள் துலங்குகின்றது. இது தமிழீழத்தின் தேசிய நாளாகவும் இருக்கின்றது.

இம்மாவீரர் நாளை அணி செய்யும் வகையிலே மாவீரர் வாரம் கொண்டாடப்படுகின்றது. நவம்பர் 21ம் நாள் மாவீரர் நாள் ஆரம்பமாகின்றது. இம்மாவீரர் வார நிகழ்வுகள் மிகவும் சிறப்புடன் கொண்டாடவேண்டிய கடப்பாட்டில் தமிழீழ மக்கள் உள்ளார்கள். இது அவர்களுக்கான ஒரு வரலாற்றுக் கடனாகும். இக்கடன் தமிழீழ மக்களால் நன்கு நிறைவேற்றப்படுகின்றது. தமிழீழ மக்களின் வாரிசுகளாகப் பிறப்பெடுத்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தம்மை ஆகுதி ஆக்கிக்கொண்ட மாவீரர்கள் இன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும், தமிழீழ மக்களின் வாழ்வின் உயர்வுக்கும் இறுக்கமான உந்து சக்தியாக விளங்குகின்றார்கள்.

இந்த மாவீரர்களின் சாதனை வரலாறுகள் வரலாற்று ஏட்டில் புதிய புதிய நிகழ்வுகளாக வரைந்தும் வரையப்பட்டும் வருகின்றன. எமது மாவீரர்களின் வரலாற்று உண்மைகளை உணரும் உலக மக்கள் அனைத்துலகத்தேசிய விடுதலைப் போராட்டங்களுக்குள்ளே தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தனிச் சிறப்பையும் இனங்கண்டுள்ளனர். மிகப் பெரிய ஈகங்களை ஆற்றி வரலாறு படைத்த மாவீரர்கள் பிறப்பெடுக்கும் தாய் வயிறு தமிழீழ மக்களிடத்தில்தான் உண்டு என உலகோர் இன்று வாய்விட்டுக் கூறுகின்றனர்.

இதனால் எமது விடுதலைப் போராட்டத்தின் நியாய தர்மங்களையும் புயலின் மையமாக நின்று செயல்படும் எமது தலைமைத்துவச் சிறப்பும் மேன்மையையும் தமிழீழ மக்களின் தேசிய உணர்வையும், விடுதலைப்போராளிகளின் திறன் நிலைகளையும் உலக மக்கள் நன்கு தெரிந்து கொண்டனர்.

மொத்தத்தில் இன்று தமிழீழ மக்களின் எல்லா விதமான வளர்ச்சி உயர்வுகளுக்கும் மாவீரர்கள் வழிகோலினவர்களாக இருப்பதை நன்கு உய்த்து உணர முடிகிறது. தமிழீழ மக்களின் மேன்மையை உயர்த்திய மாவீரர்களின் நினைவாகக் கொண்டாடப்படும் மாவீரர் வார நிகழ்வுகளைச் சிறப்புடன் கொண்டாடுவதின் மூலம் தமிழீழமக்கள் தம்மேன்மை இன்னும் உயர்த்திக் கொள்கின்றார்கள். இவ்விழா தமிழீழ தேசிய விழாவாகும் தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கொண்டாடப்படும் விழாவும் இதுவாகும்.

தமிழினத்தின் புதிய வரலாற்று வாழ்வின் பண்பாட்டு விழாவாகவும் இவ்வாண்டு பெற்றுவிட்ட மாவீரர் விழா மாண்டு மறைந்து புதைந்து வழக்கிழந்து போன தமிழரின் உயரிய பண்பை மீண்டும் வெளிக் கொணர்ந்து அரங்கேறச் செய்த விழாவாகவும் இருக்கின்றது.

நல்லதொரு தலைவன் வழிகாட்டியதால் தலையெடுத்து விட்டோம், சிறப்புற உயர்கிறோம். பொலிவுற விளங்குகிறோம். மாவீரர் துதிபாடும் தமிழ்ப்பண்பு விழாவைக் கொண்டாடும் வாய்ப்பும் பெற்று நிற்கிறோம்.

"தேசம் எழுந்திங்கு
தன்தோற்றம் காட்டிட
தேசம் எரித்தவர்
தாயகமிழாத்
திறன்காண்போம்

## இராசிபலன்

27 - 11 - 1993

சனிக்கிழமை

(தமிழுக்கு கார்த்திகை 12)

திரயோதசி மு. ப. 9-33 வரை. பரணி பி. இ. 4-42 வரை; சித்தாமிர்தம் இராகு காலம் காலை 9-12முதல் 10-42 வரை, சுபநேரம் காலை 3-12 முதல் 4-42 வரை.

மேடம்: சுபகாரிய முயற்சி, தனலாபம், அதிக மகிழ்ச்சி.

இடபம்: பயண தடங்கல், கோபப்படல், வயிற்றில் கோளாறு.

மிதுனம்: சுபச்செய்தி, தெய்வபக்தி, காரிய பலிதம்.

கடகம்: அதிகாரிகள் ஆதரவு, நண்பர்வருகை, தியாகம்.

சிங்கம்: பெரியோர் வன்மம், கடித தொல்லை, அலைச்சல்.

கன்னி: தொழில் பீதி, மனத்தாங்கல், குடும்பசெலவு.

துலாம்: தாயார் நினைவு, விருந்துண்ணல், குதூகலம்.

விருச்சிகம்: இனசன உதவி, பெருந்தன்மை, பணவரவு.

தனுசு: வழியில் தொல்லை, புத்தி தடுமாற்றம், கடன் பகை.

மகரம்: தனிமைப் படல், தொழில் பாதிப்பு, குடும்ப பிரிவு.

கும்பம்: மாமனார்பெருமை, வீட்டில் சுபகாரியம், புகழ்.

மீனம்: கடித தொல்லை, அவசர முடிவு, மனவேதனை.

—ஜோஸ்யர்.

# படையினர் பிடியில் உள்ளோர் உணவிற்கு பெரும் திண்டாட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, வாகரை போன்ற இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் வாழும் மக்கள் உணவுத் தட்டுப்பாட்டினால் பெரிதும் அவதிப்படுகின்றார்கள்.

படையினரின் கட்டுப்பாட்டில் இயங்கும் கடைகளிலே பொருட்கள் கொள்முதல் செய்யவேண்டுமென்றும்படையினர் கட்டளையிட்டுள்ளனர். இதேவேளை இந்தக் கடைகள் வாரத்தில் மூன்று நாட்கள் மாத்திரமே திறக்கப்படுகின்றது.

இந்தக் கடைகளில் குறைந்தளவு உணவுப் பொருட்கள் தங்களுக்கு வழங்கப்படுகிறதென்று பொது மக்கள் தெரிவித்துள்ளார்கள் என்று அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(ம-இ)

## அகதி முகாம்களுக்கு ஆஸி. தூதர் விஜயம்

(வவுனியா)

வவுனியாவில் ஆங்குளம் சிதம்பரபுரத்தில் அமைந்துள்ள அகதி முகாம்களை, ஆஸ்திரேலிய உயர் ஸ்தானிகராலய அபிவிருத்தி உதவி யோசகர் பற்றிஸ் டெனிஸ் பார்வையிட்டு அகதிகளின் குறைபாடுகளைக் கேட்டறிந்து கொண்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை "யூனிசெப்" தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த இரண்டு உயர் அதிகாரிகளும் அகதி முகாம்களைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

இவர்கள் பல தொண்டர் நிறுவனங்களின் அதிகாரிகளையும் சந்தித்துள்ளனர் -ம-இ


எங்கள் மணிகள் இதயமெல்லாம் நிறைந்தவர்கள்...
அனைவரையும் மாவீரர் நாளில் போற்றிப் புகழுவோம்!!
அழகுசாதனப் பொருட்கள், அன்பளிப்பு சாதனங்கள்,
காலத்துக்கு ஏற்ற ஒப்பனைப் பொருட்கள் அனைத்தும்
விருப்பம்போல் தேர்ந்தெடுக்க சிறந்த ஸ்தாபனம்
இராஜேஸ்வரி றேட்ஸ்
பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி



எங்கள் சுதந்திரத்திற்காக உயிரை ஈர்த்த மாவீரர்களை போற்றுவோம்
★ எழில் கொஞ்சும் வளையல்கள்! ★ கண்ணைக் கவரும் டிசைனில் காதணிகள் ★ கதைபேசும் மோதிரங்கள்!!!
வகை, வகையாய் நகைகளனைத்தையும் வழங்க கஸ்தூரியார் வீதியில் உங்களை வரவேற்கிறது.
ஆம் நித்தம், நித்தம் புத்தம் புதிய நகைகளை அறிமுகப்படுத்துபவர்கள்
SAJ சிறி அமலா ஜுவல்லர்ஸ்
74/, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


வீட்டுக்கு ஒரு தோட்டம் செய்வோம் - எங்கள் தமிழீழ நாட்டுக்கு வளம் சேர்ப்போம்.

# தேசிய அரசொன்றை நிறுவ தயாராகி வருகிறோம்

## இளம்பரிதி உரை

உடுவில்

"மக்கள் தங்களுடைய உடனடி தேவைகள் நிறைவேற்றக்கூடிய செயற்பாடுகளையே வெற்றிஎனக் கருதுகிறார்கள். ஆனால் விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் பூநகரி தாக்குதலில் எதிர்பார்த்து போனதைவிட பெரியவெற்றியையும் பூரண பலத்தையும் பெற்றுள்ளார்கள்"

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட மாணவர் அமைப்பால் உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடத்தப்பட்ட மாவீரர்தின விழாவில் உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இ. இளம்பருதி மேற்கண்டவாறு கூறினார்.

திரு. இளம்பரிதி மேலும் கூறியதாவது: இன்று ஐந்தாவது வருடமாக மாவீரர் தினத்தைக் கொண்டாடுகிறோம். முதலாவது கொண்டாட்டகாலத்தில் இந்திய ராணுவமும் துரோகக்கும்பல்களும் அதனை கலைத்து கலகம் விளைவிக்க தயாராகின. உயிர் உடைமைகள் அனைத்தையும் அழிக்கும் நிலையில் அவரவர்கள் இருந்த போதும் விடுதலை உணர்வும் உறுதியும் கொண்ட மக்கள் அதனை எதிர்த்து நின்றனர்.

ஒவ்வொரு யுத்தங்கள் ஏற்படும் போதும் சமுதாய சீரழிவுகள், கலைப்பாதிப்புக்கள் பொருளாதார ஸ்திரமின்மை தோன்றவே செய்யும். ஆனால் எமது போராட்ட காலத்தில் இவற்றை ஓரளவு நிவர்த்தி செய்யக்கூடிய பொருளாதார நிதிமுன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிச்சைக்காரத்தனம். குற்றச்செயல்கள் இன்று குறைந்துவிட்டன. உழைத்து வாழ வேண்டும் என்ற உணர்வு மக்களிடம் ஏற்பட்டுள்ளது. ஸ்ரீலங்காவைவிட எமது மக்கள் சுகாதார ரீதியில் கூட இன்று வளர்ச்சியடைந்துள்ளார்கள்.

சீரான நிர்வாகத்தை நிலைநிறுத்த முயன்று வருகிறோம். தேசிய அந்தஸ்து என்ற நிலையை பெற்றுள்ள அதே நேரத்தில் தேசிய அரசு ஒன்றையும் நிறுவதயாராகின்றோம்.

எமதுபோராட்டம் எல்லாப் பக்கத்திலும் பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளது. அதனை மறைக்கும் வகையில் ஸ்ரீ லங்கா அரசு பொய்ப்பிரசாரங்களை செய்கின்றது. பயங்கரவாதம் என பெயர் சூட்டி, நாசகார அழிவு வேலைகளைச் செய்து போராட்டத்தை கொச்சைப்படுத்தி மக்களை அந்நியப்படுத்த முனைகின்றது. அரசு மேற்கொள்ளும் எந்த அரசியலோ இராஜதந்திரமோ வெற்றிபெறவில்லை. அவர்களின் செயல்கள் எமது போராட்டத்துக்கு ஆ[illegible]த்தையும் போராளிகளுக்கு மனோபலத்தையுமே வளர்க்கின்றன.

அழுகின்ற குழந்தைக்கு மாறி மாறி இனிப்பு கொடுத்து அழுகையை நிற்பாட்ட முயல்வது போல ராணுவத்தின் ஒவ்வொரு தோல்விக்கும் தலைசாய்த்து சீனா, அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் நாடுகளின் ஆயுதங்களை அவர்களுக்கு அரசு வழங்கிவருகிறது. ஆனால், போராட்ட மன வலிமை அற்ற இராணுவம் அவற்றை பறிகொடுத்துவிடுகிறது. எமது போராட்ட முன்னெடுப்புக்கு அவர்களிடம் பறித்த ஆயுதங்களே பயன்படுகின்றன.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பூநகரி தாக்குதல் எமக்கு பெருவெற்றியை தந்துள்ளது. இருக்கும் படையணியின் மனோபலம் தான் வெற்றிக்கு காரணம்.

எமிடம் போதிய ஆயுதங்கள் உண்டு. சிறந்த வழிகாட்டல் உண்டு. போரில் வெல்லத்தக்க போதிய மன வலிமை உண்டு. ஆனால் இருக்கும் படையணியை இழந்துவிட்டால்...? எமக்கு இப்பொழுது தேவைப்படுவது படை பலம் தான். இந்தவளம் எமக்கு வந்து சேரின் எமது விடுதலை நாள் அதிக தூரத்தில் இல்லை. மாவீரர்களின் கனவுகள் நிறைவேற போராட்டத்திற்கு வேண்டிய ஆட்பலத்தை மக்களிடம் வேண்டி நிற்கிறோம்.

-109-இ

## புதிய சங்கம்

(நெல்லியடி)

புலோலி - வடக்கு மாதனை சிக்கன கடன் உதவிக் கூட்டுறவுச் சங்க அங்குரார்ப்பணம் கடந்த வாரம் புலோலி வடக்கு கிராமசேவை அலுவலர் திரு வி. சேதுநாயகம் தலைமையில் நடைபெற்றது.

-160

# மாவீரர் நாள் ஏற்பாடுகள்

## மாவீரர் வளைவுகள்

(கொழும்புத்துறை)

மாவீரர் நினைவாக அரியாலை சரஸ்வதி சனசமூகநிலைய [illegible] வீதியின் இருபக்கமும் போர்க்கால நிகழ்வுகளைச் சித்தரிக்கும் இருவளைவுகளும், அரியாலை தபால்கட்டைச் சந்தியிலும் போர்க்கால நிகழ்வுகளைச் சித்தரிக்கும் சிறப்பான வளைவுகளும் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் உள்ள மாவீரர் படங்களுக்கு மக்கள் தினசரி காலை மாலை தீபம் ஏற்றி மலர்தூவி அஞ்சலி வழிபாடுகளைச் செய்து வருகின்றனர் -154

## பெற்றோர் கௌரவிப்பு

(கோண்டாவில்)

யாழ். இந்துமகளிர் கல்லூரியினரால் மாவீரர்கள் இருவரின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர். கல்லூரியின் மாணவிகளாக இருந்து வீரமரணமடைந்த வீரவேங்கை மாலியாக்கினியினதும், வீரவேங்கை சபரியினதும் பெற்றோரே இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர். கல்லூரி அதிபர் திருமதி ஜெயராஜா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உரைகள், கவிதைகள், எழுச்சிப் பாடல்கள் என்பன இடம்பெற்றன.

## மாவீரர் வழிபாடு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை துண்டிச் சந்தியில் மாவீரர் பந்தல் ஒன்று அமைத்து மாவீரர் திருவுருவப் படங்களுக்கு காலை, மாலை தீபம் ஏற்றி மலர்தூவி அஞ்சலி வழிபாடுகள் மக்களால் செய்யப்பட்டு வருகிறது.

இந்த சந்திக்கு சந்தி போர்க்கால நிகழ்வுகளைச் சித்தரிக்கும் வளைவுகளும், மாவீரர் படங்களும் வீதிகள் தோறும் சிவப்பு, மஞ்சள் கொடிகளாலும் கமுகு, சவுக்கு மரங்களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இந்த விபுலானந்தர் வீதி இருமருங்கிலும் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டுள்ளது. -154

## மரம்நாட்டு விழா

(பருத்தித்துறை)

மாவீரர் மேஜர் வேலன் (சுந்தரலிங்கம் சுந்தரவேல்) ஞாபகார்த்தமாக வீதி பெயர் சூட்டும் விழாவும் மரம்நாட்டும் விழாவும் வியாபாரிமூலை அண்ணா சனசமூக நிலையத் தலைவர் திரு எஸ். சிவநேசன் தலைமையில் நடைபெற்றது.

வீதியின் புதிய பெயரான சுந்தரவேல் வீதி பெயர்ப்பலகையை மாவீரர் லெப்டினன் பூபாலனின் தந்தையார் திரு. வி. வேலாயுதம் திரைநீக்கம் செய்து வைத்தார். மேஜர் வேலனின் திருவுருவப்படத்திற்கு மாவீரர் விஸ்ணுவின் தாயார் திருமதி பூமா மலர்மாலை அணிவித்தார்.

மேஜர் வேலன் குடிநீர் கிணற்றடியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக வடமராட்சி இணைப்பாளர் திரு பூங்குன்றன், உதவி இணைப்பாளர் திரு. வளவன் ஆகியோர் மரக்கன்றுகளை நாட்டி வைத்தனர். மேஜர் வேலனின் தந்தை திரு சுந்தரலிங்கம் நன்றியுரை வழங்கினார். -52

## மக்கள் அஞ்சலி

(கொழும்புத்துறை)

மாவீரர் திருஉருவப்படங்களுக்கு தனங்கிளப்பு, கோயிலாக்கண்டி, மறவன்புலோ, நாவற்குழி, மூளாய், தொல்புரம், சுழிபுரம் ஆகிய பகுதிகளில் மக்கள் தீபம் ஏற்றி, மலர்தூவி அஞ்சலி வழிபாடுகளைச் செய்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

-154

## வீதி பெயர்சூட்டுவிழா

(பருத்தித்துறை)

அல்வாய் வடமத்தி பொட்டப்பா வீதிக்கு மாவீரர் லெப்டினன் பூபாலன் ஞாபகார்த்தமாக கிருஸ்ணகுமார் வீதி எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது இவ்வீதிப் பெயர் சூட்டும்விழா வலம்புரி அறிவாலயத் தலைவர் திரு. பொன் பூரணம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. மேஜர் வேலனின் தந்தை திரு சுந்தரலிங்கம் பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்தார். மாவீரர் பூபாலனின் தந்தை திரு. வேலாயுதம் நன்றியுரை நிகழ்த்தினர்.

-52

## சிரமதானப் பணி

(கொழும்புத்துறை)

மாவீரர் நினைவு வாரத்தை முன்னிட்டு தொல்புரம் வட இலங்கைச் சர்வோதயத்தினர் யாழ். வேம்படி மகளிர் கல்லூரிச் சுற்றுடல்களைச் சர்வோதயத் தொண்டர்கள் சிரமதானம்மூலம் செப்பனிட்டு வருகிறார்கள். -154

## வீதி துப்பரவு

(பருத்தித்துறை)

மாவீரர் தினத்தையொட்டி வெருடாவில் கலைபரி சன

(6ம் பக்கம் பார்க்க

★ சுதந்திர தமிழ் ஈழம் மலர
தியாகசிலர்களை வழிபடுவோம்!!
கடலலையென காண்பவர் அனைவரும்
★ மலைத்து நிற்கும் ஜவுளி ஸ்தாபனம் ★
பட்டுப் பருத்திப் பிடவைகளின் ஜவுளிக்கடல்
சீமாட்டி
122, மின்சார நிலைய வீதி,
[மேல்மாடி]
யாழ்ப்பாணம்.

சுதந்திர புருஷர்கள், தற்கொடையாளர்கள், வீரபுருஷர்கள் எம் மாவீரர்கள்
அகில உலகமெங்கும் கலிங்கத்துப் பரணிபாடி தமிழன் குரல் ஓங்குதடா
சகலவிதமான ஆங்கில மருந்து வகைகளையும் தட்டுப்பாடின்றி வழங்கும் ஒரே ஸ்தாபனம்.
குறிஞ்சிமெடிக்கல்ஸ்
பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தரணியெங்கும் மாவீரர் புகழ் பாடுவோம்...
எங்கள் மணிகள் கண்மணிகள்!!
சகலவிதமான ஆங்கில மருந்து வகைகள் கால்நடைகளுக்கான மருந்து வகைகள்
அனைத்துக்கும் பெயர்பெற்ற ஸ்தாபனம்
பகவான் மருந்தகம்
221, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

°° சுதந்திர தாகங்கொண்டு விடுதலை உணர்வுடன் வீரச்சாவடைந்த எம் தம்பிகளை போற்றுவோம்!

★ கண்களுக்கு விருந்தளிக்கும் வைபவக் கோணங்களை கலந்த வண்ணக் கலவையாய் மிக்ஸிங் கமரா மூலம் படமெடுத்திடவும்.

★ செவிகளுக்கு இனிய விருந்தளிக்கும் பழைய, புதிய பாடல்களை பதிவு செய்துகொள்வதற்கும்

★ பழைய, புதிய வீடியோ படங்களை வாடகைக்குப் பெற்றிடவும்.

# சுப்பஸோ

வீடியோ ஓடியோ சென்ரர்

198/5, நாவலர் வீதி,

யாழ்ப்பாணம்.


## சாளரம் வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

'சாளரம்' நவம்பர் மாத இதழ் வெளிவந்துள்ளது. இந்த இதழில் இலங்கை அரசுக்கு நல்லதொரு பாடம். ஆசிரிய தலையங்கம் - பல்கலைக் கழக அனுமதியும் தரப்படுத்தலும், எமது இன்றைய நெருக்கடிகளும், இலட்சிய வீரர்கள் இறப்பதில்லை, சமூகவியல் அறிமுகம், தமிழீழத்தின் எதிர்கால சிற்பிகள் உருவாகும் காந்தரூபன் அறிவுச்சோலை, ஒப்ரேசன் யே ஓப் பிக்ஸ், உயிர்கொல்லி எயிட்ஸ் நோய்க்கு சித்த மருத்துவம் குணமளிக்குமா?, கட்டுரைகளும் - கவிதைகள், அறிவுலகம், விஞ்ஞானக் கேள்வி பதில்கள், பாலனன் பதில்கள் ஆகிய அம்சங்களோடு வெளிவந்துள்ளது. -ம-வி


மாவீரர் புகழ்பாடும் நன்நாள்!!

சலவிதமான உணவுப் பொருட்கள்
பாலுணவுப் பொருட்கள்
அத்தியாவசியப் பொருட்கள்
சகல தினசரிப் பத்திரிகைகள், சஞ்சிகைகள்
வாசகர் நூலக சேவை

# சிவன் ஸ்ரோர்ஸ்

வளாகச் சந்தி - திருநெல்வேலி

தியாக செம்மல்களின் புகழைப் பாடுவோம்!

சுவைமிகு
★ அப்பிள் ★ கிறேப்ஸ் ★ ஒறேஞ்
கொழும்பில் இருந்து வருவித்து விற்பனை செய்கின்றோம். மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

# வைரமுத்து அன் சன்ஸ்

519, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

தமிழ் அன்னைக்கு புகழ் சேர்க்கும்
மாவீரர்களுக்கு வணக்கங்கள்!!



# மலரும் மலர்கள்

BLOSSOMS

(வீடியோ புகைப்பட சேவை)

82, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.



மாவீரர்களின் தற்கொடைக்கு மண்டியிடுவோம்!

°° சின்னச் சின்ன ஆசைகளை வண்ண, வண்ண உன்னத கலைநயம் மிக்க நகைகளை உங்கள் எழில்மிகு கேசத்திற்கேற்ற அதிநவீன மோஸ்தர்களில் தரம் குன்றா தங்கப் பவுண் நகைகளாக செய்து பெற்றிட வாரீர்!!

# சிறிநந்தியா நகைமாளிகை

2 G, ஸ்ரான்லி வீதி, <> யாழ்ப்பாணம்.



மாவீரர்களின் தியாகமே சுதந்திர தமிழ் ஈழம்!!

★ கண்ணைக் கவரும் வர்ண வேலைப்பாடுடைய தங்க நகைகளின் கலைக்கோட்டம், 22 கரட் தங்க நகைகளை உத்தரவாதத்துடன் வழங்கும் ஒரே நிறுவனம்

# சோபனா நகைமாளிகை

116 V, கஸ்தூரியார் வீதி, <> யாழ்ப்பாணம்.

★ மாவீரர்கள் காற்றில் கரைபவர்களல்ல, எங்கள் நினைவுகளில் நிலைத்து நிற்கும் கண்மணிகள்; வரலாறு சமைக்க விரைந்திடுவோம் வாரீர்!!

சுவை குன்றா ஐஸ்கிறீம் வகைகளுக்கு

# லிங்கம் கூல்பார்

வெலிங்டன் சந்தி,

யாழ்ப்பாணம்.

# இராணுவ அடக்குமுறை

(1ம் பக்கத் தொடர்ச்சி) படுத்துறங்கும் எமது வீரர்களின் கல்லறைகளில் இருந்து இந்த சுதந்திரப் பிரகடனங்களின் பேரொலி எழுகிறது. ஆருயிரத்திற்கும் அதிகமான இலட்சிய வேங்கைகளின் சத்திய வாக்காக இந்த விடுதலை முழக்கம் கேட்கிறது. இந்த விடுதலை முழக்கத்தில் எழுச்சி கொண்டே எமது இலட்சியப் பயணம் தொடர்கிறது.

இரத்தம் சிந்தும் அரசியலாக எமது போராட்ட வரலாறு நீண்டு செல்கிறது. எமது விடுதலை இயக்கம் ஆரம்பமாகிய காலத்திலிருந்து இன்றுவரை, இந்த நீண்ட கால இடைவெளியில், நாம் எத்தனையோ நெருக்குதல்களையும், சோதனைகளையும், ஆபத்துக்களையும் சந்தித்தபோதும் எமது அடிப்படையான அரசியல் இலட்சியத்தில் இருந்து என்றுமே நாம் தளர்ந்ததும் இல்லை, தடுமாறியதும் இல்லை.

தமிழீழத் தனியரசே தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு இறுதியான, உறுதியான தீர்வு என்பதில் எமக்கு அசையாத நம்பிக்கையும் தெளிவும் உண்டு. எமது நிலைப்பாட்டை எமது எதிரி மட்டுமன்றி, முழு உலகமும் நன்கறியும்.

தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தனியரசு அமைப்பதைத்தவிர, தமிழ் மக்களுக்கு வேறு வழியில்லை எனத் தீர்மானித்தை நிறைவேற்றி, மக்களிடம் மனுப் பெற்ற கட்சிகளும், ஆயுதப் போராட்டம் மூலமே தனியாட்சி நிறுவ முடியுமென ஆர்ப்பரித்த ஆயுதக் குழுக்களும், எப்பொழுதோ தமது அரசியற் குறிக்கோளைக் கைவிட்டுத் தமிழ் இனத்திற்குத் துரோகம் இழைத்து நிற்கின்றனர். எமது இயக்கம் மட்டுமே அன்றிலிருந்து இன்றுவரை வரித்துக் கொண்ட குறிக்கோளிலிருந்து வழிதவறவில்லை.

தமிழீழத் தனியரசு என்ற இலட்சியத்தை அடைவதிலுள்ள இமாலய இடையூறுகளை நாம் அறியாமல் அல்ல. அன்றியும் இந்த இலட்சியத்திற்கு எதிராக, எந்தெந்த சக்திகள் எப்படியெல்லாம் செயற்படும் என்பதும் எமக்குத் தெரியாதது அல்ல. பிரதேச வல்லரசின் ஆதிக்க அபிலாசைகளும் உலக வல்லரசுகளின் கேந்திர இலக்குகளும் எத்தகைய தலையீடுகளை ஏற்படுத்தும் என்பதையும் நாம் எதிர்பார்ராமல் இருக்கவில்லை. இந்தச் சவால்கள் எழுந்த பொழுதெல்லாம் நாம் அதைத் துணிந்து எதிர்கொள்ளத் தவறவில்லை. அழிவின் விளிம்பிற்குத் தள்ளப்பட்ட பொழுதும், நாம் கொண்ட கொள்கையைக் கைவிடவில்லை. ஆதிக்க சக்திகளின் ஆவேசப் புயல்களும் எம்மை ஆட்டம் காணச்செய்யவில்லை.

தார்மீக அடிப்படையில், நாம் ஒரு உறுதியான அத்திவாரத்தில் நிற்கிறோம் எமது போராட்ட இலட்சியம் நியாயமானது. சர்வதேச மனித அறத்திற்கு இசைவான எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள். தனியரசை அமைக்கும் தகுதி பெற்றவர்கள் சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் இந்த உரிமையை எவரும் நிராகரித்துவிட முடியாது.

நீதியின் அடிப்படையில், மனித தர்மத்தின் அடிப்படையில், சத்தியத்தின் அடிப்படையில், நியாயப்பாடு எமது பக்கமாக இருக்கும் போது நாம் எமதுபோராட்ட லட்சியத்தில் உறுதிபூண்டு நிற்கவேண்டும். இலட்சியத்தில் உறுதிபூண்டு இறுதிவரை போராடும் மக்கள்தான் விடுதலையை வென்றெடுப்பார்கள்.

இந்த உலகமானது மானிட தர்மத்தின் சக்கரத்தில் சுழலவில்லை என்பது எமக்குத் தெரியாததல்ல. ஒவ்வொரு நாடும் தனது தேசிய சுயநலத்தையே முதன்மைப் படுத்துகிறது. மக்கள்உரிமை, மனித உரிமை என்ற தார்மீக அறத்திலும் பார்க்க பொருளாதார, வர்த்தக நலன்களே இன்றைய உலக ஒழுங்கமைப்பை நிர்ணயிக்கிறது. சர்வதேச அரசியலும் சர்வதேச ராஜதந்திர உறவுகளும் சரி இந்த அடிப்படையில்தான் செயற்படுகிறது. இந்த நிலையில் எமது போராட்டத்தின் தார்மீக நியாயப்பாட்டை சர்வதேச சமூகம் உடனடியாக அங்கீகரித்துவிடும் என நாம் எதிர்பார்க்க முடியாது. ஆயினும், நாம் அந்த அங்கீகாரத்திற்காகத் தொடர்ந்து குரல் எழுப்பி வரவேண்டும். மாறிவரும் உலகில் எதிர்பாராத மாற்றங்கள் நிகழும். ஒரு சந்தர்ப்பத்தில், சர்வதேச சூழ்நிலை எமக்கு சாதகமாக அமையலாம். அப்பொழுது உலகத்தின் மனச்சாட்சி நியாயத்தின் சார்பாக எமது பக்கம் திரும்பும்.

உண்மையில் எமது போராட்டத்தின் வெற்றி உலகத்தின் கையில் தங்கி இருக்கவில்லை. எமது வெற்றியானது எமது கையில், எமது பலத்தில், எமது உறுதிப்பாட்டிலேயே தங்கியிருக்கிறது. நீதியும் நியாயமும் எமது பக்கமாக இருந்தால் மட்டும் போதாது. நாம் வலிமை பெற்றவர்களாக இருக்கவேண்டும் போராடும் திறமை பெற்றவர்களாக இருக்கவேண்டும் தளராத உறுதிபெற்றவர்களாக இருக்கவேண்டும்.

எமது எதிரியான சிங்கள பேரினவாத அரசு எமது மக்களின் பிரச்சினையை நீதியின் அடிப்படையில், மனித தர்மத்தின் அடிப்படையில் தீர்க்க விரும்பவில்லை பலாத்காரப் பிரயோகத்தின் அடிப்படையிலேயே தமிழர் பிரச்சினைக்கு முடிவுகட்ட முனைகிறது.

சிங்களப் பேரினவாதத்தின் ஈவிரக்கமற்ற இராணுவப் போக்கு காரணமாக, தமிழரின் இனப் பிரச்சினை நாற்பது ஆண்டுகாலத்திற்கு மேலாக தீர்வின்றி முடிவின்றி இழுபடுகிறது. நீண்ட நெடுங் காலமாக, நீதி கிடைக்குமெனக் காத்திருந்த தமிழர்கள், சாவையும் அழிவையும், தாங்கொணாத் துன்பத்தையும் சந்தித்ததைத் தவிர வேறு எதையும் காணவில்லை.

சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர் பிரச்சினைக்குத் சமாதான வழியில் ஒரு நியாயமான தீர்வை வழங்கப் போவதில்லை எனக் காலங்காலமாக நாம் வலியுறுத்தி வந்த அரசியல் உண்மையை எமது மக்கள் இன்று ஆழமாக உணரத்தொடங்கியுள்ளனர்.

எமது இயக்கம் என்றுமே சமாதானப் பாதைக்குக் குறுக்காக நிற்கவில்லை. சிங்கள அரசுக்கு நாம் எத்தனையோ சந்தர்ப்பங்களை வழங்கினோம். திம்புவில்தொடங்கி கொழும்பு வரை பேச்சுவார்த்தைகளில் பங்கு கொண்டோம். ஆனால் சிங்கள அரசு தமிழர் பிரச்சினைக்கு உருப்படியான தீர்வு எதையும் முன்வைக்க மறுத்தது. சமரச வழியைக் கைவிட்டு போர்க்களத்தில் பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்பியது

1990ம் ஆண்டு ஜூன் மாதம் இரண்டாவது கட்டமாக தமிழீழப் போர் ஆரம்பமாகிய காலந்தொட்டு, எமது விடுதலை இயக்கம் சமாதானத்தின் கதவுகளை அகலத் திறந்து வைத்தது. பேச்சுவார்த்தைக்கு இணங்கி நாம் நேசக்கரத்தை நீட்டிய பொழுதெல்லாம் சிங்களப் பேரினவாதம் அதைப் பற்றிக்கொள்ள மறுத்தது. போர் நிறுத்தம்செய்து, பொருளாதாரத் தடைகளை நீக்கி சமாதானத்திற்கான சூழ்நிலையை உருவாக்குமாறு நாம் மாறி மாறி விடுத்த கோரிக்கைகளையும் நிராகரித்தது. சமாதானத்திற்குப் பதிலாக யுத்தத்தையும் அமைதிக்குப் பதிலாக அழிவையும் சிங்களப் பேரினவாத அரசு எமது மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டது. இறுதியில் தமிழரின் உரிமைப் போராட்டத்தை 'பயங்கரவாதம்' எனச்சித்தரித்துக் காட்ட முனைந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக இனப்பிரச்சினை என்பதே இல்லையெனப் பகிரங்கமாகவே பிரகடனம் செய்துள்ளது.

இராணுவ பலத்தைக் கொண்டு தமிழரின் சுதந்திர இயக்கத்தை அழித்துவிடலாம் என்ற இறுமாப்பில் சிங்கள ஆளும்வர்க்கம் சமாதானத்தின் கதவுகளை இறுகச் சாத்திவிட்டது தமிழ் மண்ணை ஆக்கிரமித்து தமிழரை அடக்கியொடுக்கி ஆளவேண்டுமென்ற குறிக்கோளை முன்பிருந்ததைவிடத் தீவிர போக்கை எடுத்தது. இந்த இராணுவவாதக் கடும் போக்கின் வெளிப்பாடாகவே யாழ்ப்பாணக் குடாநாடு மீது படையெடுப்புகளை நடாத்தவும் அரசு திட்டம் தீட்டியது.

மண்கிண்டிமலையிலும், புலோப்பளையிலும், இறுதியாகப் பூநகரியிலும் நாம் கிட்டமிட்டு நிகழ்த்திய வெற்றிகரமான தாக்குதல்கள் சிங்கள இராணுவ வாதத்திற்குக் கொடுக்கப்பட்ட பேரடிகளாகும். இதில் பூநகரிச் சமர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. போர்க்கலையில் புலிகள் இயக்கத்தின் பரிநிலை வளர்ச்சியின் உயர்கட்டப் பரிமாணத்தை இந்தச் சமர் எடுத்துக்காட்டுகிறது. பெரும் படையணிகளை நுட்பமாக நகர்த்தி எதிரியின் பாசறைப் பலமுனைகளில் ஊடுருவி, பெரும் கூட்டுப் படைத்தளங்களைக்கூட துரித கதியில் அழிக்கவல்ல அபாரமான சக்தி புலிகளிடமுண்டு என்பதை நாம் சிங்களப் பேரினவாதத்திற்கு நன்கு உணர்த்தியுள்ளோம். இனப்பிரச்சினையே இல்லாமல் போய்விட்டது என்று கூறியவர்களுக்கு இனப் பிரச்சினையின் விஸ்வ ரூபத்தைக் காட்டியுள்ளோம். இந்தச் சமர்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆயுதப் படையினர் அழிக்கப்பட்டுள்ளனர். எமது தாயக மண்மீது படையெடுப்பை நடத்தலாம். ஆக்கிரமிப்பை நிலைநிறுத்தலாம். அகலக்கால் வைக்கலாமெனக் கற்பனை செய்துவரும் இராணுவாதிகளுக்கும் பேரினவாதிகளுக்கும் புலிகளின் இந்தத் துணிகரத் தாக்குதல்கள் நல்ல பாடமாக அமையும் என நினைக்கிறேன். இராணுவத்தீர்வு என்ற பாதை எத்தகைய பயங்கரமான பேரழிவுகளை ஏற்படுத்தும் என்பதை கொழும்பிலிருந்து ஆட்சிபுரிபவர்கள் இனியாவது உணர்ந்து கொள்வார்களென நம்புகிறேன்.

சிங்களப் பேரினவாத அரசு போன்று, நாம் இன்னும் சமாதானக் கதவுகளை அடைத்துவிடவில்லை. சமரசப் பாதைக்கு முட்டுக்கட்டை போடவில்லை. ஆனால் சிங்கள ஆட்சிபீடம் தனது இராணுவ அணுகுமுறையை இறுகப் பற்றிக்கொண்டு, எமது மண் மீது படையெடுப்பை நிகழ்த்தினால், அல்லது எமது மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களைத் தொடருமானால் எமது விடுதலை இயக்கம் சமாதானத்தின் கதவுகளை நிரந்தரமாகவே மூடிவிடும் என்பதை நான் இங்கு திட்டத் தெளிவாகக் கூறவிரும்புகிறேன்.

சிங்களப் பேரினவாதத்தின் தீவிரவாதப் போக்கில் மாற்றம் ஏற்படுமென நான் என்றுமே நம்பியதில்லை. அந்த மாற்றம் ஏற்படாதவரை தமிழருக்கு நீதி கிடைக்கப் போவதில்லை. சிங்களப் பேரினவாதத்தின் கடுமையான போக்கு, தனியரசு என்ற ஒரே பாதையைத்தான் தமிழீழ மக்களுக்குத் திறந்து வைத்திருக்கிறது. அந்தப் பாதையில் செல்வதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவும் இல்லை இந்தப் பாதை வழியேதான் எமது விடுதலை இயக்கம் தனது இலட்சியப் பயணத்தைத் தொடர்கிறது.

இந்தப் பாதை மிகவும் கடினமானது. கற்களும் முட்களும் நிறைந்தது. விலங்குகளும், விஷ ஜந்துக்களும் நிறைந்தது. ஆயினும் நாம் இந்தப் பாதைவழியே எமது பயணத்தைத் தொடர்கிறோம். எமது மாவீரர்கள் இந்தப் பாதை வழியாகவே நடந்தார்கள். எமக்கு வழிகாட்டியாக முன்னே சென்றார்கள். கற்களையும், முட்களையும் அகற்றி, பாதையைச் செப்பனிட்டுத் தந்தார்கள் விலங்குகளையும், விஷ ஜந்துக்களையும் கொன்றொழித்தார்கள். அந்தப் பாதை வழியே விளக்கேற்றி வைத்தார்கள்

எமது மாவீரர்கள் ஏற்றி வைத்த அந்தச் சுடரொளியில், தெளிவாகப் புலப்படும் அந்தச் சுதந்திரப் பாதை வழியாக, நாம் எமது இலட்சியப் பயணத்தைத் தொடர்வோமாக. (கி-பி)


கன்னித்தமிழ் ஒலிக்க நாயகர்களாக
தமிழ் ஈழத்தின் வரலாற்று நாயகர்களை வாழ்த்துவோம்



கண்ணைக்கவரும் வண்ண நகைகளின் எழில்கோலம் காலத்தால் அழியாத 22 கரட் தங்க நகைகளுக்கு. யாழ்ப்பாண மக்களின் ஏகோபித்த நகைவியாபாரிகள்.

# நதியா ஜுவல்லறி

02, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நதியா ஜுவல்லறிக்கு யாழ்ப்பாணத்தில்
வேறு கிளைகள் இல்லை என்பதை
எமது அன்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
அன்புடன் அறியத்தருகின்றேன்

பூரண உரிமையாளர்: சண்முகம் இராஜேஸ்வரன் (தவம்)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10/336/B.